1970 நவம்பர் 28]

காஜாமலையில் சந்தன மரங்கள்

*59 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காஜாமலைப் பகுதிகளில் உள்ள சந்தன மரங்களை அபிவிருத்தி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இல்லை.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள படுகை நிலங்கள்

*60 வினா.—திரு. வை சுவாமிநாதன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள காட்டிலாக்காவை சேர்ந்த படுகை நிலங்கள் எத்தனை?

(இ) அவைகள் தற்போது அரசின் மேற்பார்வையின் கீழ் உள்ளனவா?

(உ) அல்லது குத்தகைக்கு விடப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) (1) ஒதுக்கக் காடு படுகை நிலங்கள் 21 இடங்களில் உள்ளன. அவற்றின் பரப்பு 1331.46 ஹெக்டர்கள்.

(2) ஒதுக்க நிலப்படுகை நிலங்கள் 30 இடங்களில் உள்ளன. அவற்றின் பரப்பு 1410.78 ஹெக்டர்கள்.

(இ) & (உ) அவைகள் தற்போது காட்டிலாகாவின் மேற்பார்வையில் உள்ளன. அவைகள் விவசாயம் செய்வதற்குக் குத்தகைக்கு விடப்படவில்லை.

திரு. ஆர். கருப்பையா : திருச்சி மாவட்டத்திலுள்ள இந்தக் காடுகளில் அரசாங்கம் ஏதாவது மரங்கள் பயிர் செய்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சவுக்கு, தேக்கு போன்ற மரங்களை காட்டு இலாகா பயிரிட்டு வருகிறார்கள்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : இந்தக் காட்டு இலாகாவிற்குச் சொந்தமான நிலங்கள் பலயிடங்களில் சாகுபடிக்கு இலாயக்கில்லாத பூமியாக இருக்கின்றன. அந்தயிடங்களில் காடுகள் வளருவதில்லை. ஆகவே இந்த நிலங்களை நிலமற்றவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசாங்கத்தால் ஏதாவது திட்டமிடப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : காவேரிக் கரை படுகை நிலங்களைப் பற்றிய கேள்வி இது. அந்த நிலங்கள் பாதுகாக்கப்பட்டால்தான் காவேரிக் கரை முதலில் பாதுகாக்கப்படும் என்பதற்காக காவேரிக் கரை ஓரங்களில் உள்ள படுகைகளை குத்தகைக்கு விடுவதில்லை. நாங்களே பராமரித்து வருகிறோம்.